2. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(எ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை/ ஆட்சிக் குழு/கல்விக் குழு மற்றும் மேலாண்மைக் குழுமம் ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை (Senate), ஆட்சிக் குழு (Syndicate), கல்விக் குழு (Academic Council) மற்றும் மேலாண்மைக் குழுமம் (Board of Management) ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

அழகப்பா பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை ஓர் உறுப்பினர், பாரதியார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை 2 உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை 2 உறுப்பினர்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை 4 உறுப்பினர்கள், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை 2 உறுப்பினர்கள், பெரியார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை 2 உறுப்பினர்கள், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை 2 உறுப்பினர்கள், தமிழ் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை 2 உறுப்பினர்கள், சென்னை பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை 6 உறுப்பினர்கள், அண்ணா பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு ஓர் உறுப்பினர், அண்ணாமலை பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு ஓர் உறுப்பினர், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு ஓர் உறுப்பினர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேலாண்மைக் குழுமம் ஓர் உறுப்பினர், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் மேலாண்மைக் குழுமம் ஓர் உறுப்பினர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மேலாண்மைக் குழுமம் ஓர் உறுப்பினர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் கல்விக் குழு 2 உறுப்பினர்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுக் காலங்களாக இருப்பினும், அவர்கள் 15–வது சட்டமன்றப் பேரவைக் காலம் முடியும்வரை அப்பதவிகளில் பணியாற்றுவர்.

தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்புத்தாளினை 24–3–2020 அன்று முற்பகல் 11–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் வேண்டுவோர்பேரவைச்செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத்தாள்கள் 24–3–2020 அன்று பிற்பகல் 2–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 24–3–2020 அன்று பிற்பகல் 4–00 மணிக்குள் தங்களது வேட்புத்தாளினைத் திரும்பப் பெறலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அப்பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

செல்லத்தக்க வேட்புத்தாள்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

15. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

} *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.